# <u>உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்.</u>

அன்பு சகோதர சகோதரிகளுக்கு இனிய வாழ்த்துக்கள்:

<u>ஆண்டவரின் வேத வார்த்தைகள் உங்கள் சிந்தனைக்கு:</u>
மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனை (ஆத்மாவை) நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு (ஆத்மாவுக்கு) ஈடாக என்னத்தைக் கொடுப்பான்? (மத்தேயு 16:26)

*எப்படி நமது ஆத்மாவைக் காத்துக்கொள்வது?*

ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான், முதற்பலனானவர் கிறிஸ்து; பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள். (1கொரிந்தியர் 15:22-23)

*யார் இந்த ஆதாம்? யார் இந்த கிறிஸ்து?*

தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். (யோவான் 3:16)

*இந்த அன்பை அறிந்து கொள்வது எப்படி?*

”வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்.” என்கிறார் இயேசுகிறிஸ்து. (மத்தேயு 11:28-29)

ஆண்டவர் ஏற்படுத்திய வழியை தெளிவாக அறிந்து கொள்ள வேதத்தை மேலும் தயவுசெய்து வாசியுங்கள். நன்றி.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து உங்களை ஆசீர்வதிப்பாராக.